தான் அதை அமைக்க வில்லை என்பது நம்முடைய அமைச்சருடைய குறிப்பிலேயே தெரிகிறது. ஆகவே அதை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நீதி வழங்குகின்ற இந்த ஆட்சியில், பேராவூரணி மக்களுக்கும் நீதியை வழங்கி நீதிமன்றத்தை துவக்குவதற்கு நீங்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்வீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 149 திரு. வெ. தமிழரசு, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

149—ஆத்தூரில் நீதிமன்றம்.

* 1310 திரு. வெ. தமிழரசு,

திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூரில் சார்பு நீதி மன்றம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தற்போது உடனடியாக சப் கோர்ட் அமைக்கும் வரை வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரு நாள் நீதிபதிகள் ஆத்தூருக்கு வந்து பணியாற்றும் வகையில் அமர்வு நீதி மன்றம் செயல்படுத்த நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அரசு பரிசீலிக்குமா என்பதை பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரில் அந்த நீதிமன்றம் அமைக்க ரூ. 9,02,000 தொடர் செலவும், ரூ. 3,75,000 தொடரா இனச் செலவும் தேவைப்படுகிறது. நிதி பிரச்சனை தான் அங்கே நீதி மன்றம் அமைப்பதற்குத் தடையாக இருக்கிறது. அதனையும் பரிசீலனை செய்து ஒரு நிரந்தர நீதிமன்றமே ஆத்தூரில் கொண்டுவர அரசு முயலும்.

1991 அக்டோபர் 4]

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலூகாவில் மேற்கு எல்லையிலிருந்து மக்கள் தற்போது 85 கிலோமீட்டர் தூரம் சேலத்திற்கு கோர்ட்டிற்காக வரவேண்டி இருப்பதாலும் ஆத்தூர், தலைவாசல், ஏற்காடின் ஒரு பகுதி ஆகிய மூன்று தொகுதிகளில் உள்ள மக்கள் பயன் பெறவும், சேலத்திற்கு அடுத்த பெரிய நகரமான ஆத்தூருக்கு இந்த நிதி ஆண்டில் நீதிமன்றம் கொண்டுவரப்படுமா என்பதை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எனது முந்தைய கேள்வியிலேயே பதில் அளித்திருக்கிறேன்.

திரு. கா. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியில் கங்கவல்லி, தம்மம்பட்டி, கவரப்பாடி, கிழக்குராஜபாளையம், புத்தூர் போன்ற கிராமங்கள் சேலத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளன. வழக்கு விஷயமாக சேலத்திற்கு 100 கிலோமீட்டர் தூரத்திற்கு அந்தப் பொதுமக்கள் வர வேண்டியிருப்பதால் நடப்பு நிதியாண்டிலேயே அங்கே கோர்ட் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 150 திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

150— மதுரையில் குடும்ப நீதிமன்றம்.

* 2425, திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மதுரையில் சென்னையைப் போன்று ஜீவானாம்ச வழக்கு விவாகரத்து வழக்குகளை விசாரிக்க குடும்ப நீதிமன்றம் (Family Court) அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரையில் குடும்ப விவகாரங்கள் குறித்த நீதி மன்றம் (family court) ஏற்படுத்தும் செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.